**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**E.A.No.01/2024 in E.P.No.21/2024**

**நாள்.03.12.2025**

ம.சா.1 திரு.ராஜிவ்காந்தி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>1 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு நான்தான் விவரம் சொன்னேன் என்றால் சரிதான். OS.No.69/2023 வழக்கில் நான் ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மனு சொத்து 2ம் எதிர்மனுதாரர் பார்த்திபனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மனு சொத்தில் எனக்கு குத்தகை உரிமை மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். OS.No.69/2023 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை பற்றி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த **தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை**யின் சான்றிட்ட நகல்கள் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் ஆகும். அவை முறையே **எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி OS.No.69/2023 மனு சொத்தை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய வேண்டி மனு தாக்கல் செய்து, அது அனுமதிக்கப்பட்டது என்றால் அந்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். இராமேஸ்ரம் நீதிமன்ற அமீனா மனு சொத்திற்கு வந்து, ஜப்தி உத்தரவை ஒட்டி சார்வு செய்து புகைப்படம் எடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. மனு சொத்து ஜப்தி செய்யப்பட்டுள்ளதாக இராமேஸ்வரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகி வில்லங்கத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் 2ம் எதிர்மனுதாரரிடம் 59 சென்ட் நிலத்தை குத்தகைக்கு பெற்றதாகவும், வானதி என்பவரிடம் 31 சென்ட் நிலத்தை குத்தகைக்கு பெற்றதாகவும் என் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.03 16:02:01 +0530

இரண்டு நிலங்களும் அருகருகே உள்ளன என்றால் சரிதான். வானதியின் 31 சென்ட் நிலத்திற்கு மாத குத்தகை ரூ.30,000/- கொடுக்கிறேன். பார்த்திபனுக்கு 59 சென்ட் நிலத்திற்கு மாத குத்தகை ரூ.10,000/- கொடுக்கிறேன் என்றால் சரிதான்.

2ம் எதிர்மனுதாரரும், வானதியும் எனக்கு எழுதிக்கொடுத்த குத்தகை செல்லாது என்று இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்து, OS.No.15/2024 and OS No. 20/2024 ஆக நிலுவையில் உள்ளன என்றால் சரிதான். நான் 2ம் எதிர்மனுதாரருடன் 06.05.2022ம் தேதி குத்தகை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 என் கைப்பட எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.08.2024 முதல் 21.09.2024 வரையில் மொத்தம் ரூ.70,000/- கொடுக்கப்பட்டதாக ம.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆவணத்தை இந்த மனுவிற்காக நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது மனுவில் OS.No.69/2023 வழக்கின்படி கொடுக்கவேண்டிய அசல் மற்றும் வட்டித்தொகையை 1ம் எதிர்மனுதாரருக்கு நான் கொடுக்க தயாராக உள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். EP.No.21/2024 மனுவில் கண்டபடி நாகேந்திரன் என்பவர் பார்த்திபனிடம் இருந்து தீர்ப்பு தொகையான ரூ.23,11,178/- மற்றும் பின்வட்டியையும் பெறுவதற்கு, நிறைவேற்றுமனு தாக்கல் செய்து, அந்த மனுவில் கண்டபடி நாகேந்திரனுக்கு சாதகமாக உத்தரவு ஆக கூடாது என்பதற்காக பார்த்திபனுடன் சேர்ந்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

OS.No.69/2023 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நான் ஆட்சேபிக்க முடியாது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட பணபரிவர்த்தனை பற்றி எனக்குத் தெரியாது.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.03 16:02:03 +0530

இந்த மனுவினை தாக்கல் செய்ய எனக்கு தார்மீகமாக உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. எனது மனுவில் சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்கு விரோதமாக நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.03 16:02:10 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .